©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 2.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 9] சென்னை, புதன்கிழமை, மார்ச் 6, 2013
மாசி 22, நந்தன, திருவள்ளுவர் ஆண்டு – 2044

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M–2)த் துறை, 11 செப்டம்பர் 2012.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவிலும், 7 AA பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளுக்கு பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இந்த வரைவு மேற்படி சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

திலுந்பச்ச½

மேற்சொன்ன விதிகளில்:–

(i) 95 ஆம் விதியின், கீழ் அட்டவணை–24இல் பத்தி 12க்குப் பிறகு கீழ்க்கண்ட பத்தி சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

**12–A தனிநபர் விபத்துக் காப்பீடு:–** ‘‘தீப்பெட்டி அல்லது பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும், அத்தகைய தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களின் காப்பீட்டுத் தொகை குறித்த விவரங்கள் அடங்கிய அறிக்கையை படிவம் எண் 41 இல் தயார் செய்து அதனை, தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியைச்சேர்ந்த தொழிற்சாலைகள் துணைத்தலைமை ஆய்வாளர் மூலமாக தலைமை ஆய்வாளருக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அனுப்ப வேண்டும்.

(2) படிவம் எண் 40 க்குப் பிறகு பின்வரும் படிவம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் அதாவது:–



DTP—III-1(a)(T-Sup) (9)—2

**படிவம் எண் 41**

(95 ஆம் விதியின் கீழ் 12—A பத்தியின் கீழ் வரையறுக்கப்பட்டது)

**தனிநபர் விபத்துக் காப்பீடு அறிக்கை**

| *தொழிற் சாலையின் பெயர் மற்றும் முகவரி* | *பதிவு எண்* | *பணிபுரியும் பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கையும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வருபவர்களும்* | *காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி* | *காப்பீட்டு திட்டத்தின் தன்மை* | *செல்திறன் கால அளவு ..லிருந்து ...வரை* | *செலுத்தப்பட்ட மொத்த பீரிமியம் தொகை* |
|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* |
| | | உரிய வயதடைந்த ஆண்: | | | | |
| | | உரிய வயதடைந்த பெண்: | | | | |
| | | வளரிளம் பருவ ஆண் | | | | |
| | | வளரிளம் பருவ பெண். | | | | |

மேலே நெடும்பத்தி (3) இல் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் காப்பீட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அவை நடைமுறையில் உள்ளது என்றும் நான் இதனால் உறுதியளிக்கிறேன்.

நாள்:

இடம்:

*உரிமையாளரின் கையொப்பம்*

மேற்சொன்ன விவரங்கள் சரிப்பார்க்கப்பட்டு அவை சரி என்று கண்டறியப்பட்டுள்ளது.

*தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர்.*

**அறிவிக்கை—II**

*[அரசாணை (நிலை) எண் 130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M—2)த் துறை, 11 செப்டம்பர் 2012.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியத் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இந்த வரைவு மேற்படி சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

திலுந்பய்

மேற்சொன்ன விதிகளில், படிவம் எண் **25–**இல் உள்ள நெடும்பத்தி **(16)–**க்குப் பதிலாக பின்வரும் நெடும் பத்திகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

| (16) | (17) |
|---|---|
| *விபத்துக் காப்பீட்டுத் திட்டம் ஏதேனும் இருப்பின் அதன் விவரங்கள்* | *குறிப்புரைகள்* |

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர் (மொழிபெயர்ப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 168, தொழில் (MMC–2)த் துறை, 18 செப்டம்பர் 2012.]*

**1957** ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடும் விதிமுறைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **67/1957**) **15** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1959** ஆம் ஆண்டு கனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திலுந்பச்ச½

மேற்சொன்ன விதிகளில்:–

(1) விதி 7–க்குப் பதிலாக பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது:–

***''7. பொது செயல் நோக்கங்களுக்காக வெட்டியெடுத்தல்:–***

குடிநீர், ஏரி, குளங்கள் அல்லது ஏரிகளின் கரைகள் நீங்கலாக புறம்போக்கு உட்பட ஒதுக்கப்பெறாத தரிசு நிலங்களிலிருந்து கிரானைட் நீங்கலாக சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கு, மத்திய அரசுத் துறை மற்றும் மாநில அரசுத் துறை, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அல்லது ஒப்பந்ததாரர்கள் குறித்த நேர்வில், அவ்வப்போது வரையறுக்கப்பட்டவாறான கனிமங்களின் விலையையும், உரிமைக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்படலாம். ஆனால் தேவைப்படுகின்ற அத்தகைய கனிமங்கள் உண்மையான பொது நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டதுடன் விற்கப்படவில்லை அல்லது வணிக ஆதாயங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை.

**2.** இந்த விதிகளின் இணைப்பு III-A இல் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பயன்பாட்டுத்துறை அல்லது உள்ளாட்சி அமைப்பால் ஒப்பந்தம் பெற்றுள்ள ஒப்பந்ததாரரால், இந்த விதியின் கீழ் குத்தகைக்கான விண்ணப்பம் ஒன்று, மாவட்ட ஆட்சியருடன் சேர்ந்து ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள அதிகாரியின் திட்டவட்டமான பரிந்துரையுடன், திருப்பியளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணம் தொடர்பாக ரூபாய் 1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்தப்பட்டதற்கான அசல் செலுத்தச் சீட்டுடன் அளிக்கப்பட வேண்டும்.

**3.** உண்மையான பொதுநோக்கத்திற்கு ஆதரவான, ஒப்பந்தத்தின் சான்றொப்ப நகல், பணி ஆணை நகல், சிறு கனிமத்தின் பெயர், உண்மையில் தேவைப்படும் அளவு, குத்தகைய கால அளவு உள்ளிட்ட ஆவண ஆதாரங்கள் அனைத்தும் விண்ணப்ப படிவத்துடன் அளிக்கப்பட வேண்டும்.

**4.** விண்ணப்பம் அனைத்து வகையிலும் முழுமைப்பெற்று, பயன்பாட்டுத்துறை அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணியமர்த்தப்பட்ட ஒப்பந்ததாரரால் அளித்த ஆவண ஆவணங்கள் மற்றும் உண்மையான பொது நோக்கம் குறித்து மாவட்ட ஆட்சியர், மனநிறைவடைவாராயின், மாவட்ட ஆட்சியர், உண்மையான பொது நோக்கத்திற்காக விண்ணப்பதாரருக்கு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான குத்தகையினை வழங்கலாம். ஆனால், இந்த விதிகளில் முறையே பிற்சேர்க்கை II மற்றும் பிற்சேர்க்கை III-B-ல் வரையறுக்கப்பட்ட வீதங்களில் அனுமதிக்கப்பட்ட மொத்த சிறு கனிமத்திற்கான உரிமைக் கட்டணத்தையும், கனிம விலையையும் ஒட்டுமொத்தமாக விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.

**5.** மண்ணியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையாளர், நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளர் ஆகியோரை கொண்ட குழுவானது, சவ்வூடு, சரளைக்கல், ஒழுங்கற்ற கற்கள் என பொதுவாக அழைக்கப்பெறுகின்ற மண்ணிற்கான தற்போதுள்ள அங்காடி விலையை கருதிப்பார்த்து, கனிமம் வெட்டியெடுக்கும் இடத்தில் அல்லது சுரங்கக்குழியில் கனிமங்களுக்கான விலையை கணக்கிடுவர். குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மேற்சொன்ன சிறுகனிமங்களுக்கான விலையை திருத்தியமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை மண்ணியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையாளர் அனுப்புவார். மேற்சொன்ன சிறு கனிமங்களுக்கான விலையை நிர்ணயித்து அரசு ஆணைகள் பிறப்பிப்பதுடன் அதனையடுத்து ஒவ்வோராண்டும் இதனை திருத்தியமைக்கும். அரசு, அந்த நாளில் ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், அரசு நிர்ணயித்த கனிமங்களின் விலையானது, அந்த ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**6.** விண்ணப்பிக்கப்பட்ட சிறு கனிமங்களின் அளவை பொறுத்து, கனிமம் வெட்டியெடுப்பதற்கான குத்தகையானது, ஓராண்டுக்கு மிகாத காலத்திற்கு விண்ணப்பதாரர் பெயரில் வழங்கப்படலாம். இந்த விதிகளின் பிற்சேர்க்கை III-இல் வரையறுக்கப்பட்ட படிவத்திலுள்ள குத்தகை ஆவணமானது, ஆணையில் வரையறுக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டும், குத்தகை வழங்கப்படுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் செயல்படுத்தப்படவேண்டும்.

**7.** குத்தகை ஒப்பாவணத்தை செயல்படுத்தும்போது, இவ்விதிகளுக்கான இணைப்பு-III இல் வரையறுக்கப்பட்டவாறு, மாவட்ட ஆட்சியர் ஒவ்வோராண்டும் சிறுகனிமங்களுடைய விலையில் ஏற்படும் திருத்தத்தை கருத்தில் கொண்டு, குத்தகை ஒப்பாவணம் செயல்படுத்தப்பட்ட பின்னர், சிறு கனிமங்களின் விலையை அரசு திருத்தியமைக்கும் போதெல்லாம், அவ்விலையில் ஏற்படும் வேறுபாட்டுத்தொகையை குத்தகைதாரர் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை சேர்க்க வேண்டும்.

**8.** கனிமம் வெட்டி எடுக்குமிடத்திற்கு குத்தகை அனுமதி வழங்கப்பட்ட இடத்தில், உண்மையான பொது நோக்கத்திற்கான பணி முடிவுற்ற பின்னர், குத்தகை அனுமதியளிக்கப்பட்ட பகுதியிலிருந்து, வெட்டியெடுக்கப்பட்ட கனிமங்கள் முழுவதும் உண்மையான பொதுப்பணிக்காக பயன்படுத்தப்பட்டது மற்றும் அவை கணக்கிடப்பட்டது என்ற ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் கையொப்பமிடும் அதிகாரம் அளிக்கப்பெற்ற அதிகாரியிடமிருந்து அசல் சான்றிதழை குத்தகைதாரர் பெற்று, அதனை சம்மந்தப்பட்ட மாவட்ட அதிகாரிக்கு அளிக்க வேண்டும். மேற்சொன்ன உண்மையான பொதுநோக்கப்பணிக்காக குத்தகைதாராரால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட சிறுகனிமங்களின் அளவுக்கான உரிமக்கட்டணம் மற்றும் விலையை எவ்வித நிலுவையுமின்றி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது என்ற சான்றிதழை குத்தகைதாரர் சம்மந்தப்பட்ட ஆட்சியரிடமிருந்து பெற்று, அளித்தாலன்றி மற்றபடி இவ்விதியின் கீழ், குத்தகைதாரருக்கு பட்டிகளை தீர்வு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி குத்தகைதாரரின் பட்டிகளை தீர்வுசெய்யக்கூடாது.

இருப்பினும், அரசு உத்தரவின் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத் துறையால் செயற்படுத்தப்படும் யாதொரு குறிப்பிட்ட பொதுநலத் திட்டங்களுக்கான கனிமங்களுக்கு தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம்.

**என். சுந்தரத்தேவன்,**
*அரசு கூடுதல் செயலாளர்.*

**2.** இணைப்பு–III க்குப் பிறகு பின்வரும் இணைப்பு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

**இணைப்பு III-A**

(7 ஆம் விதியைக் காண்க)

கனிமம் வெட்டி எடுக்கும் இடத்திற்கு குத்தகை அனுமதிக்கான விண்ணப்பம். (மூன்று படிகளில் அளிக்கப்பட வேண்டும்)

அனுப்புநர்

..........................

..........................

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,

.........................மாவட்டம்.

ஐயா,

..........................................ஆகிய நான்/நாங்கள்.......................................என்ற உண்மையான பொது நோக்கத்திற்கான பணியை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிம சலுகை விதிகளைச் சேர்ந்த 7 ஆம் விதியின் கீழ் கனிமம் வெட்டி எடுக்கும் இடத்திற்கான குத்தகை அனுமதிக்காக இந்த விண்ணப்பத்தை அளிக்கின்றேன்/அளிக்கின்றோம்.

1. பெயர் மற்றும் முகவரி (சான்றொப்பமிடப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான இரு புகைப்படங்கள் இணைக்கப்பட வேண்டும்.) :

2. பயன்படுத்துவோர் துறை/உள்ளாட்சி மன்றத்தின் பெயர் :

3. மேற்கொள்ளப்பட்ட பொதுப் பணியின் பெயர் :

4. விண்ணப்பக் கட்டணம் செலுத்திய விவரங்கள் (மூல செலுத்து சீட்டு இணைக்கவும்) : தொகை :

   செலுத்துச்சீட்டு எண்:

   நாள்:

   வங்கி:

5. விண்ணப்பித்துள்ள சிறுகனிமத்தின் பெயர் :

6. பயன்படுத்துவோர் துறை/உள்ளாட்சி மன்றத்தின் உரிய அதிகாரியால் அளிக்கப்பட்ட சான்றிதழுடன் பணிக்குத் தேவைப்படும் கனிமத்தின் அளவு :

7. திட்டப்பணி துவங்கப்படும் உத்தேசமான நாள் மற்றும் பணி நிறைவடையுமென எதிர்பார்க்கப்படும் நாள் :

8. தேவையான குத்தகை கால அளவு :

9. பணி ஆணை குறித்த விவரங்கள் (பரிந்துரை செய்யும் அதிகாரியால் சான்றொப்பமிடப்பட்ட பணி ஆணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்.) :

10. ஒப்பந்தத்தின் வரையறைகளும் நிபந்தனைகளும் (பரிந்துரை செய்யும் அதிகாரியால் சான்றொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்.) :

11. விதிகளின்படி, கனிமத்தின் விலையையும், உரிமக் கட்டணத்தையும் ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் செலுத்துவதற்கு ஒப்பந்ததாரர் விரும்புகிறாரா? :

12. குத்தகை ஒப்பாவணத்தை மேற்கொண்ட பின்னர் அறிவிக்கப்பட்ட கனிமத்தின் விலை திருத்தியமைக்கப்படும்போது கனிம விலை வீதத்தின் வேறுபாட்டை செலுத்த ஒப்பந்ததாரர் விரும்புகிறாரா? :

தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளைச் சேர்ந்த 7ஆம் விதியின் கீழ், கனிமம் வெட்டி எடுக்கும் இடத்திற்கான குத்தகை அளிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இடம்:

நாள்: *விண்ணப்பதாரரின் கையொப்பம்.*

**பயன்படுத்துவோர் துறை/உள்ளாட்சி மன்றத்தின் பரிந்துரை**

நான் நன்கு அறிந்த வரையிலும், நம்புகிறவரையிலும் மேற்சொன்ன தகவல்கள் உண்மையானவை என்று சான்றளிக்கிறேன். மேற்சொன்ன ஒப்பந்ததாரருக்கு, கனிமம் வெட்டி எடுப்பதற்கான இடத்திற்கு அனுமதி அளிப்பதைப் பொறுத்த வரையில் விதிகள், ஆணைகள் அல்லது வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் மீறல் ஏதேனும் இருப்பின், அதன் காரணமாக, மேற்சொன்ன ஒப்பந்ததாரரிடமிருந்து, தொகை ஏதும் வசூலிக்கப்பட வேண்டியிருப்பது பின்னர் கண்டறியப்பட்டால், அதனை வசூலித்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் செலுத்துவேன் என்று இதனால் உறுதியளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

மற்றும் நாள்

*கையொப்பம்* :

பெயர் :

(பெரிய எழுத்துக்களில்)
பதவிப் பெயர் :

**என். சுந்தரத்தேவன்,**
*அரசு கூடுதல் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (மொழிபெயர்ப்பு)*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தித் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.